agency for integrated care

# நிதியுதவித் திட்டங்கள்

## சுகாதாரப் பராமரிப்பு மானியங்களின் தகவலேடு



# உங்கள் அன்புக்குரியவர்களைப் பராமரிப்பதற்காகும் செலவைச் சமாளிக்க உங்களுக்கு உதவுகிறோம்

நமது அன்புக்குரியவர்கள் முதுமைப் பருவத்தை அடையும்போது, அவர்களுக்கு நம்மால் இயன்ற ஆகச்சிறந்த பராமரிப்பை வழங்க நாம் முயற்சி எடுக்கிறோம். பணச் சிரமங்களை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கும் சௌகரியமாக வாழ இத்திட்டங்கள் உதவி புரியும்.

தகுதி பெற, அந்தந்த திட்டத்தின் தகுதி நிபந்தனைகளை உங்களது அன்புக்குரியவர் நிறைவேற்ற வேண்டும். (அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்)


1




## சமூக சுகாதார உதவித் திட்டம்

உங்கள் வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள பங்குபெறும் பொது மருந்தகங்களில் **மானியங்கள்** பெறலாம்.

2



## முதியோர்களுக்கான நடமாட்டம் மற்றும் இயக்கம் ஏற்படுத்தும் நிதி

உங்கள் அன்புக்குரியவர் வழங்கப்படும் **மானியங்களுடன்** இயல்பாக நடமாடி அதிக சுதந்திரத்துடன் வாழ முடியும்:

- **கருவிகள்** (எ.கா குளியல் நாற்காலி, சக்கர நாற்காலி) அவர்களுடைய அன்றாட நடவடிக்கைகளில் உதவும் (எ.கா குளிப்பதற்கு, நடமாட்டத்திற்கு)
- **வீட்டு உபயோக மருத்துவக் பொருட்கள்** (எ.கா பெரியோருக்கான டயப்பர்கள், பால் பொருட்கள்)

3



## இயலாமையுள்ள முன்னோடித் தலைமுறையினருக்கான உதவித் திட்டம் (PioneerDAS)

நடத்தரமான அல்லது கடுமையான இயலாமையுள்ள முன்னோடிகளின் பராமரிப்புத் தேவைகளுக்கு உதவியாக **மாதந்தோறும் $100** கிடைக்கும்.

4



## முதியோருக்கான இடைக்கால இயலாமை உதவித் திட்டம் (IDAPE)

எல்டர்ஷீல்டு திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாத இயலாமையுள்ள, வசதி குறைவான முதிய சிங்கப்பூரர்களுக்கு மாதந்தோறும் **$150 அல்லது $250** வரை கிடைக்கும்.

## பாராமரிப்பாளர்கள் பயிற்சி உதவித்தொகை (CTG)

5



**ஒவ்வொரு ஆண்டும் $200 பயிற்சி உதவித்தொகையுடன்**, உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் நல்லபடியாகப் பராமரிப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள்.

அடிப்படை பராமரிப்பாளர் பயிற்ச்சிக்கு[1] உங்கள் உதவியாளரை அனுப்புவதர்கான பயிற்சி கட்டணத்தை ஈடுசெய்ய இந்த மானியத்தை பயன்படுத்தலாம்.

6



## வெளிநாட்டுப் பணிப்பெண் வரிச்சலுகை (குறைப்பாடு கொண்டுள்ள நபர்கள்)

நலிவடைந்த முத்தோரை அல்லது இயலாமையுள்ள அன்புக்குரியவரைப் பார்த்துக்கொள்ள வெளிநாட்டு பணிப்பெண்ணை வேலைக்கு எடுக்கும்போது, நீங்கள் **குறைவான வரிச்சலுகை மாதத்திற்கு $60**[2] மட்டுமே செலுத்துவீர்கள்.

7



## வீட்டு பராமரிப்பு மானியம் (HCG)

மிதமான அல்லது கடுமையான குறைபாடுகள் உள்ள உங்கள் அன்புக்குரியவரைப் பாராமரிக்கும்போது **மாதத்திற்கு $200 பெருங்கள்.**

1 இந்த பயிற்ச்சி உங்கள் அன்புக்குரியவரின் இயக்க நிலையின் அடிப்படையில் மூத்த கவனிப்பின் அனைத்து முக்கிய பகுதிகளையும் உள்ளடக்கியது.

2 வெளிநாட்டுப் பணிப்பெண் வரிச்சலுகை "சிறு பிள்ளை திட்டமும்" "முதியோர் திட்டமும்" உள்ளன. 16 வயதுக்குக் குறைவான பிள்ளையையும் 67 வயதுக்கு மேலான முத்தோரையும் பராமரிக்க உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு இத்திட்டங்கள் ஆதரவளிக்கின்றன. தகுதி பெற்றால், நீங்கள் விண்ணப்பிக்க தேவையில்லை, உங்களுக்கு தானாகவே சலுகை கிடைக்கும்.

சமுகப் பராமரிப்புச் சேவைகள் பற்றி மேல்விவரம் அறிய, **www.aic.sg/financial-assistance** பார்வையிடவும்.

# தகுதி

| | தகுதி நிபந்தனைகள் | 1 சமுக சுகாதார உதவித் திட்டம் | | | | 2 முதியோர்களுக்கான நடமாட்டம் மற்றும் இயக்கம் ஏற்படுத்தும் நிதி | 3 இயலானமயுள்ள முன்னோடித் தலைமுறையினருக்கான உதவித் திட்டம் (PioneerDAS) | 4 முதியோருக்கான இடைக்கால இயலாமை உதவித் திட்டம் (IDAPE) | 5 பாராமரிப்பாளர்கள் பயிற்சி உதவித்தொகை (CTG) | 6 வெளிநாட்டுப் பணிப்பெண் வரிச்சலுகை (குறைப்பாடு கொண்டுள்ள நபர்கள்) | 7 வீட்டு பராமரிப்பு மானியம் (HCG) | | தகுதி நிபந்தனைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பராமரிக்கப்படுவோர் | குடியுரிமை | சிங்கப்பூர் குடிமக்கள் | | | | சிங்கப்பூர் குடிமக்கள் | 1987-ம் ஆண்டுக்கு முன்பாகச் சிங்கப்பூர் குடியுரிமை பெற்ற முன்னோடிகள் | சிங்கப்பூர் குடிமக்கள் | சிங்கப்பூர் குடிமக்கள் அல்லது நிரந்தரவாசிகள் | சிங்கப்பூர் குடிமக்கள் | சிங்கப்பூர் குடிமக்கள் | நிரந்தர வாசிகள் | குடியுரிமை |
| | வயது/ பிறந்த தேதி | எல்லா வயதினரும் | | | | 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோர் | 1950-ம் ஆண்டுக்கு முன்பாகப் பிறந்தவர்கள் | 30 செப்டம்பர் 1932 அன்று அல்லது அதற்கு முன்பாகப் பிறந்தவர்கள், **அல்லது** 1 அக்டோபர் 1932 தேதிக்கும் 30 செப்டம்பர் 1962 தேதிக்கும் இடையில் பிறந்து, 30 செப்டம்பர் 1962 நிலவரப்படி ஏற்கனவே இயலாமைகள் இருந்தவர்கள் | 65 வயது மற்றும் அதற்கு மேலானோர் **அல்லது** இயலாமை உள்ளவர் | 16 வயது முதல் 66 வயது வரையிலானோர் | பொருந்தாது | | வயது/ பிறந்த தேதி |
| | பராமரிக்கப்படுபவருக்கு நிரந்தரமாக உதவி தேவைப்படும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளின்[3] எண்ணிக்கை | பொருந்தாது | | | | பொருந்தாது | 3 | 3 | 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோருக்கு பொருந்தாது<br>65 வயதுக்குக் குறைவான, உடலில் இயலாமை உள்ளவர் | 1 | 3 | | பராமரிக்கப்படுபவருக்கு நிரந்தரமாக உதவி தேவைப்படும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளின்[3] எண்ணிக்கை |
| பராமரிப்பாளர்கள் | பராமரிப்பாளருக்கான நிபந்தனைகள் | | | | | | பொருந்தாது | பொருந்தாது | குடும்ப உறுப்பினர் அல்லது வெளிநாட்டு பணிப்பெண் | வெளிநாட்டுப் பணிப்பெண்ணின் முதலாளியும் பாராமரிக்கப்படுபவரும் ஒரே குடும்ப உறுப்பினர்களாகவும், அடையாள அட்டையில் பதிவு செய்யப்பட்ட ஒரே முகவரியில் சேர்ந்து வாழ்பவர்களாகவும் இருக்கவேண்டும் | பொருந்தாது | விண்ணப்பதாரருக்கு பெற்றோர், கணவன்/மனைவி அல்லது பிள்ளை சிங்கப்பூர் குடிமகனாக இருக்க வேண்டும் | பராமரிப்பாளருக்கான நிபந்தனைகள் |
| | பராமரிப்பாளருக்கான பயிற்சி | | | | | | | | பராமரிப்பாளர் பயிற்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும் | பொருந்தாது | பொருந்தாது | | பராமரிப்பாளருக்கான பயிற்சி |
| குடும்பம் | | CHAS பச்சை* | CHAS ஆரஞ்சு | CHAS நீலம் | மெர்டேக்கா தலைமுறை*/ முன்னோடித் தலைமுறை | | | | பொருந்தாது | | | | |
| | ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்[4] (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,000 -க்கு மேல் | $1,201 - $2,000 | $1,200 மற்றும் அதற்கும் குறைவு | மெர்டேக்கா தனலமுறையினருக்கும்* முன்னோடிகள் அனைவருக்கும், வருமானம் அல்லது வீட்டின் ஆண்டு மதிப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், CHAS அனுகூலங்கள் வழங்கப்படும் | $2000 மற்றும் அதற்கும் குறைவு | | $2,800 மற்றும் அதற்கும் குறைவு | | | $2,800 மற்றும் அதற்கும் குறைவு | | ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்[4] (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) |
| | வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு வீட்டின் ஆண்டு மதிப்பு[5] (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,000 -க்கு மேல் | $13,001 - $21,000 | $13,000 மற்றும் அதற்கும் குறைவு | | $13,000 மற்றும் அதற்கும் குறைவு | | $13,000 மற்றும் அதற்கும் குறைவு | | | $13,000 மற்றும் அதற்கும் குறைவு | | வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு வீட்டின் ஆண்டு மதிப்பு[5] (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) |
| | | - | | | | துணைபுரியும் சாதனங்களின் வகையையும் அவை விண்ணப்பதாரருக்குப் பொருத்தமானதா என்பதையும் பரிசீலிக்கும் தகுதிபெற்ற மதிப்பாய்வாளரின் கருத்தைப் பொறுத்தே மானியத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும்.<br>வீட்டு உபயோக மருத்துவக் பொருட்களுக்கு, உங்கள் அன்புக்குரியவர் வீட்டு அடிப்படையிலான தாதிமை/மருத்துவ சேவைகள், வீட்டு உடல்நோவு தணிக்கும் சேவைகள் அல்லது ஒருங்கிணைந்த வீட்டு பராமரிப்பு மற்றும் பகல்நேர மைய பராமரிப்பு திட்டத்தில் பங்குபெறுபவராக இருக்கவேண்டும். | | | | | விண்ணப்பதாரர் ஒரு சமுக பராமரிப்பு நிருவனத்தில் (எ.கா. தாதிமை இல்லம்) அல்லாமல் வீட்டில் வசிக்க வேண்டும் | | |

பின்குறிப்புகள்

[3] நடவடிக்கைகள்:
- குளிப்பதற்கு
- ஆடை உடுத்திக்கொள்வதற்கு
- சாப்பிடுவதற்கு
- கழிவறையைப் பயன்படுத்துவதற்கு
- நடமாட்டத்திற்கு
- இடம் விட்டு இடம் மாறுவதற்கு

[4] ஒவ்வோரு நபருக்கான வீட்டு மாத வருமானம் = குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்கவேண்டும்

[5] ஆண்டு மதிப்பை சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆனையம் மதிப்பிடுகிறது.

* நவம்பர் 2019-யிலிருந்து

சமூகப் பராமரிப்புச் சேவைகள் பற்றி
மேல்விவரம் அறிய,

Click **www.aic.sg**

Call **1800 650 6060**

Visit **AIC Link**

ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான நிறுவனம் (AIC), மக்கள் நலமாக வாழ்வதற்கும், மாண்புடன் முதுமை அடைவதற்கும் ஒரு துடிப்பான பராமரிப்புச் சமூகத்தை உருவாக்க முயல்கிறது. நமது வாடிக்கையாளர்கள் சிறந்த பராமரிப்புப் பலன்களை அடைந்திட ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான முயற்சிகளை AIC ஒருங்கிணைக்கிறது மற்றும் ஆதரிக்கிறது. தொடர்ந்து சுறுசுறுப்பாக இருப்பது மற்றும் நல்ல முறையில் முதுமையடைவது குறித்தான தகவல்களோடு பராமரிப்பு வழங்குபவர்களையும், முதியோர்களையும் அணுகுகிறோம், தங்களுக்குத் தேவைப்படும் சேவைகளோடு மக்களை இணைக்கிறோம். பராமரிப்பின் தரத்தை உயர்த்தும் முயற்சியில் பங்காளர்களுக்கு ஆதரவு வழங்குகின்றோம். மேலும், முதிர்வடையும் மக்களுக்குச் சேவைகளை அதிகப்படுத்த நாங்கள் சுகாதார மற்றும் சமூக பாராமரிப்புப் பங்காளர்களுடன் பணியாற்றுகிறோம். சமூகத்தில் எங்களது பணியானது, தேவை உள்ளோருக்குப் பாராமரிப்புச் சேவைகளையும், தகவல்களையும் அருகே கொண்டு வருகிறது. எங்களைப்பற்றி மேலும் அறிய, www.aic.sg ஐப் பார்க்கவும்.

விவரங்கள் 2019 அக்டோபர் நிலவரப்படி சரியானவை